# தமிழ் இலக்கியத்தில் நாடகத்தின் கோட்பாடு

**இரா.வேம்பு**

**முனைவர்பட்ட ஆய்வாளர், இராணிமேரி கல்லூரி,**

**சென்னை – 04.**

68

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் பழம்பெரும் செவ்வியல் மொழிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது தமிழ் மொழி எனலாம். இத்தமிழ் மொழியில் ஈடு இணையற்ற பலதர கருத்தாக்கங்கள் நிறைந்த பாடல்கள் அதிகமாக உள்ளது. இக்கருத்தாக்க பாடல்கள் பெரும்பாலும் மாந்தர்கள் பலர் பேசுகின்ற போன்று எழுதப்பட்டுள்ளது. அத்தகைய பாடல்களுள் நாடகக் கதை மாந்தர்களாக அறியப்படுகின்ற பலரைப்பற்றிய குறிப்புகள் பொதிந்த தமிழ் இலக்கியத்துள் நாடகம் என்ற அற்புதக் கலையின் இலக்கண அமைப்பியல் பற்றியும் நிரம்ப பேசப்பட்டுள்ளது. அத்தகைய இலக்கண இலக்கிய பாடல்கள் அல்லது செய்யுள் நூற்பாக்களில் இருந்து தமிழ் நாடகத்தின் கோட்பாடு எத்தகையது என்று அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

அத்தகைய நாடகக் கோட்பாடு பற்றிய விளக்கும் இக்கட்டுரையில் நாடக இலக்கியத்தின் வரையறை, நாடகம் என்பதன் விளக்கம், வடிவம் என்பனவற்றோடு இசைக்கருவிகளின் பயன்பாடு போன்றவையும் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது. மேலும் அக்கால இலக்கியங்களில் இருந்து அறியப்படுகின்ற பல்வடிவ நாடக வகைகளையும், நாடக இலக்கியத்தின் பாடுபொருள்கள் எவ்வாறு அமையப்பெற்றுள்ளன என்றும் நாடக அறம், நாடக உத்திகள், நடிப்பின் முக்கியத்துவம் மற்றும் பாத்திரப்படைப்புகள் அமைகின்ற விதங்கள் பற்றியும் இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**திறவுச்சொற்கள்**

பாத்திரப்படைப்பு, கோட்பாடுகள், பாடுபொருள், இசைக்கருவிகள், இலக்கண அமைப்பு, வடிவமைப்பு போன்றவை.

**முன்னுரை**

உலகில் மனித இனம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே மனிதனிடத்தில் நாடகக் கலையின் கூறுகள் பொதிந்து வந்துள்ளது. அதாவது மனிதன் பேச ஆரம்பிக்கும் முன்னரே தனது கருத்தை அடுத்தவர்களுக்குத் தெரிவிக்கும் இயல்பு நிலையில் காணப்பட்டுள்ளான். அதாவது, ஒரு கருத்தை அனைவரும் புரிகின்றவாறு நடித்தோ அல்லது அசைவுகளாலோ வெளிப்படுத்த முற்படும் சிந்தனையை நாடகக் கலை என்று கூறலாம்.

பொதுவாக நாடகக் கலையிற்குப் பெருந்துணைச் செய்வதாக இருப்பது நாடக கலைஞர்களும் பக்க வாத்தியங்களும் என்று சொல்லலாம். ஆயினும் தமிழ் இலக்கியங்களில் தொடக்க காலம்முதலே நாடகக் கலை என்றால் எப்படி இருக்கவேண்டும் என்றும் அதன் அமைப்பு அல்லது வரைமுறை இவ்வாறு இருக்கவேண்டும் என்று நாடக கலை கோட்பாடுகள் பற்றி இலக்கண இலக்கியங்கள் கூறுகின்றதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**நாடக இலக்கணம் கூறும் நூல்கள்**

பழங்காலத்தில் நாடக நூல்கள் பல இருந்துள்ளமையை உரையாசிரியர்களின் வழியே அறியமுடிகிறது. அத்தகைய உரையாசிரியர்களின் வழி அறியப்படுகின்ற நூல்களாக இருப்பது, முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரத சேனா

பதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், கூத்துநூல், செயன்முறை நூல் என்பன நாடக இலக்கணங்களை அறிவிக்கும் நிலையில் அவையாவும் இன்றில்லை என்பது வருந்துதற்குரியதாகும். தொல்காப்பியம் நாடகம் என்ற சொல்லையே கையாண்டுள்ளமையும் நாடகத்தின் தொன்மையை வெளிப்படுத்தக் கூடியதாகும்.

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்”

(தமிழண்ணல், (ஏப்ரல் 2010) தொல்காப்பியம், பொருளதிகாரம், தொகுதி -1,

மீனாட்சி புத்தக நிலையம் வெளியீடு, நூற்பா எண்.999, ப.48 )

**நாடக வடிவமும் இலக்கணமும்:**

நாடகம் என்பது கலைகளின் வகைகளும் ஒன்று அல்லது பல்வகைக் கலவையின் கூட்டுச் சேர்க்கையாகும். (நாடு + அகம்) நாட்டு மக்களின் அகத்தை (உள்ளத்தை) பிரதிபலிக்கும் கலையே நாடகம். கதை ஒன்றின் அரங்கேற்றி நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்க அமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலவைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவது அல்லது நடித்துக் காட்டுவது நாடகமாகும். இத்தகைய நாடகக் கலையினை நாடக கலைஞர்கள் பலர் குழுவாக இருந்து நடித்தனர் என்பதை,

“வாயிற் கூத்தும் சேரிப் பாடலும்

கோயில் நாடகக் குழுக்களும்”

(திரு.பொ.வே. சோமசுந்தரனார், 1970, கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை, பகுதி-க, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு, உஞ்சைக் காண்டம், விழாக் கொண்டது, பாடல் வரி. 88-89, பக்கம்.145 )

என்ற பெருங்கதைப் பாடல்வரிகளால் நாடகம் என்பது குழுவாக இருந்து நடிக்கப்பட்தை அறியமுடிகிறது.

தமிழ் நாடகத்தின் வடிவம் அல்லது இலக்கணமானது, செய்யுளாகவும் அமையலாம். உரைநடையாகவும் அமையலாம். நாடகம் எழுதுவதற்குப் பெருமுயற்சி தேவை, அத்துடன் கற்பனை வடிவமும் வேண்டும். காவியம் போன்று உணர்ச்சியோடு கதை சொல்லும் திறனும் பெற்றிருக்க வேண்டும். கதையை எழுதுபவரே கூறாமல் நாடக மாந்தரே கதையைக் கொண்டு செலுத்த வேண்டும்.

மக்கள் பலரும் ஒரே நேரத்தில் கண்டுகளிக்கும் வகையில் பலருக்கும் கவர்ச்சியூட்டக் கூடிய உணர்ச்சி வகையில் கதைப் பகுதியையும், காட்சிகளையும் அமைக்க வேண்டும். நாடகம் குறித்துச் சிறிது நேரத்தில் கண்டும் கேட்டும் பார்த்தும் அறியக்கூடிய ஒன்றாகும். அதனால் மக்கள் விரைவாகவும் தெளிவாகவும் உணரத்தக்க வகையில் நாடக வடிவத்தை அமைக்கவேண்டும். நாடகம் கண்ணாலும் செவியாலும் நுகரத் தக்க கலை என்பதை,

“கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்

நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே”

(தமிழண்ணல், (2010) தொல்காப்பியம், தொகுதி -3, மெய்ப்பாட்டியல், மீனாட்சி புத்தக நிலையம் வெளியீடு, மதுரை – 625001, நூற்பா.1221, பக்கம்.38)

என்று தொல்காப்பியர் உரைப்பது நாடகக் கலைக்குப் பொருத்தமான இலக்கண வடிவமாகும்.

**நாடக அமைப்பின் வடிவ விளக்கம்:**

முதிர்ந்த பக்குவப்பட்ட ஒரு கருப்பொருளைக் கொண்டதாய் படைத்துக் காட்டப்படும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப யதார்த்தத்தோடு வளர்ந்து நிறைவுடையதாய், காரணகாரிய இயைபுடன் கூடிய முடிவை உடையதாய், துன்பியலாகவோ - இன்பியலாகவோ நடித்துக் காட்டப்படும் பொருட்டு எழுதப்படுவது எதுவோ அதுவே நாடகமாகும்.

நாடகம் செய்யுளாகவும் அமையலாம். உரைநடையாகவும் அமையலாம். செய்யுள் வடிவில் நாடகம் அமைதல் சிறப்புடையது. தொடக்கம், குழப்பம், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்றாலும் நாடகம் இப்படித்தான் அமையவேண்டும் என்ற கருத்தில்லை.

**நாடகத்தில் பயன்படும் இசைக்கருவிகள்**

தமிழ் இலக்கியத்தில் அதிகபடியான இசைக்கருவிகளின் பயன்பாட்டினை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அரங்கேற்ற காதையின் வழி அறியப்படுவது நாடகக் கலையில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் தான் என்பதை,

“குழல்வழி நின்றது யாழே யாழ்வழி
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமை
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின்று இசைத்த தாமந் திரிகை”

(உ.வே.சாமிநாதன், 1920, சிலம்பதிகாரம மூலமும் அரும்பத உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம்,

இரண்டாம் பதிப்பு, சென்னை, அரங்கேற்ற காதை, நூற்பா.139-142, பக்கம்.75)

என்ற பாடலடி இசைக்கருவிகள், தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக கருவிகள் என நான்கு வகையாகப் பகுக்கப்பட்டு இருந்ததை சிலப்பதிகாரத்தின் வழி அறியலாம்.

**நாடக வகைகள்**

பெரும்பான்மையான திறனாய்வாளர்கள் நாடகத்தை மூவகை வகைமைக்குள் அடக்குவர். அவை,

1. படிக்கும் நாடகம்
2. நடிக்கும் நாடகம்
3. படிக்கவும் நடிக்கவும் உரிய நாடகம்

இன்றை நிலையில் நாடக வகைகளைப் ”புராணம், இதிகாசம், வரலாறு, கற்பனை, பக்தி, இலட்சியம், சமுதாயம், சமுதாயச் சீர்த்திருத்தம், தேசியம், நகைச்சுவை, பிரச்சாரம் என்ற வகைமையுள் அடக்கலாம்.” டி.கே. சண்முகம், (2009) நாடகக் கலை,பாரி நிலையம் வெளியீடு, சென்னை – 108, ப.130)

‘தெருக்கூத்து, குழந்தை நாடகம், வானொலி நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம், மேடை நாடகம், அமெச்சூர் நாடகம், தேசிய நாடகம், ஓரங்க நாடகம், செய்யுள் நாடகம், ஒளி நாடகம்” (டி.கே. சண்முகம், (2009) நாடகக் கலை,பாரி நிலையம் வெளியீடு, சென்னை – 108, ப.218) எனவும்

பகுத்துக்கொள்ளலாம்.

**நாடக இலக்கியத்தின் பாடுபொருள்**

இலக்கியங்களில் பயின்று வரும் பாடுபொருள்களை அகப்பொருள், புறப்பொருள் எனறு பகுத்து மொழிகின்றது. அகப்பொருள் என்பது காதல் உணர்வுகளைச் சார்ந்தது. இது களவு, கற்பு எனும் இரு வகைத்து; களவு என்பது காதல் வாழ்வு; கற்பு என்பது இல்லற வாழ்வு. புறப்பொருள் என்பது வீரம், கொடை, ஒழுக்கம் இவைகளை விளக்குவது. இவ்விரு பொருள் பற்றி எழுதப்படும் இலக்கியங்கள் எல்லாம் ஒன்று நாடக வழக்கிலோ அல்லது உலகியல் வழக்கிலோ எழுதப்படும் என்கின்றது. இதனை,

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்..
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்'

(தமிழண்ணல், (ஏப்ரல் 2010) தொல்காப்பியம், பொருளதிகாரம், தொகுதி -1, மீனாட்சி புத்தக நிலையம் வெளியீடு, நூற்பா எண்.999, ப.48 )

எனும் நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது. இதனையே,

”மனிதனது இன்ப வாழ்வைச் சிறப்பாக விளக்க முற்படுவது நாடக வழக்கமாகும். உணர்ச்சி விளக்கங்களைப் பொதுநிலையில் விளக்குவது உலகியல் வழக்கம் ஆகும். முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருள்களைப் பற்றியும் விளக்குவதால் நாடக வழக்கம் என்று கூறப்படுவதாக நச்சினார்க்கினியர் விளக்குகிறார்”. (முனைவர் ஞானம், 2016, தமிழ் நாடகக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும், சீதை பதிப்பகம் வெளியீடு, சென்னை – 05, பக்கம்.4)

என்ற மேற்கண்ட கருத்துகளின் வழி நாடகத்தின் பாடுபொருள் அமைப்பினை அறியமுடிகின்றது.

**நாடக அறம்**

பரிதிமாற் கலைஞர் நாடகவியல் என்ற நூலில் நாடக இலக்கணத்திற்கு அறம் என்றே பெயர் சூட்டியுள்ளார்.

“நல்லொழுக்கத்தை தனி விரித்துரைத்தலும்
நல்லொழுக்கமுள்ள நன்மை யெய்தலும்
தீயொழுக்கத்தின் தீமையைச் செப்பலும்
தீயொழுக்கமுளார் தீதுற்றதலும்
தீய தந்தீமையைச் சிறப்பித்துரைத்தலும்
செம்மையோ ரதனை சினந்துரையாடலும்
அரிய நற்பொருளினுள் அறத்தின் பாலவாம்”

(பரிதிமாற் கலைஞர், (2004) நாடகவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு, சென்னை – 113, நூற்.22, ப.22)

நல்ல ஒழுக்கத்தை மிகுதியும் விரிவாகக் காட்டலும், நல்ல ஒழுக்கத்தினை உடையவர் நன்மையினை இறுதியில் அடைதலும், தீய ஒழுக்கத்தின் கேட்டினைக் கூறலும், தீய ஒழுக்கத்தினை உடையார் கேட்டினை அடைந்து அழிதலும், தீயோர் தமது தீய செயல்களை எடுத்துரைத்துச் சிறப்பாக

எடுத்துரைத்தவிடத்தும் நல்ல குணமுடையார் அச்சொற் செயல்களுக்காக வெகுண்டு அழிதலும், ஆகிய நால் வகைப் பொருளில் அறத்தின் பகுதி என்பர் இக்கருத்துரை நாடகத்தின் அறத்தின் வழிபட்டது என்பதற்குத் தக்க சான்றாக கொள்ளலாம்.

**நாடக நடிப்பும் பயன்பாடும்**

பொதுவாக நாடகமானது, மொழி தெரிந்தவர்களுக்கும் மொழித் தெரியாதவர்களுக்கும் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் என யாவருக்கும் புரிகின்ற விதங்களில் ஒரு கருத்தைச் சொல்ல அல்லது ஒரு கருத்து யாவருக்கும் சென்றடையும் வகையில் இருப்பது நாடகக் கலையாகும். இக்கலையின் வழி ஆயிரம் சொற்களில் பத்திப் பத்தியாகச் சொல்ல விழையும் கருத்தை வாய்த்திறந்து சொல்லாமலே உடல் அசைவுகளாலும், சைகைகளாலும் புரிய வைத்துவிடலாம். இதனை,

“திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையில் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்”

((உ.வே.சாமிநாதன், 1920, சிலம்பதிகாரம மூலமும் அரும்பத உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு, சென்னை, சிலம்பு.நடுகற்காதை, 67-70, பக்கம்.564)

என்ற மேற்கண்ட அடிகள் கூத்தன் ஒருவன் ஆயிரம் திருக்குறிப்பினை அள்ளிவீசும் கண்களோடு செஞ்சடை அவிழ்ந்து நடித்ததை அறியமுடிகிறது.

அத்தகைய சிறப்புடைய நாடகக் கலையினைத் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அக்காலம் முதல் இக்காலம் வரையில் மறையாது நின்று வளர்ச்சியடைந்து வருவதற்கு காரணமாக அமைவது நாடகத்தின் மையப் பொருளாகச் சொல்லப்படுகின்ற கருத்தும் ஒன்றாகும் என்பதை அறியமுடிகிறது.

**நாடகத்தின் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம்**

ஒரு நாடக வெற்றிக்கு கதைக்கரு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது நாடகத்தில் அமைக்கப்படும் பாத்திரப்படைப்புகளாகும். ஏனெனில் நாடகத்தின் முதன்மை அங்கங்களில் ஒன்றாகத் திகழ்வது பாத்திரப்படைப்புகளாகும். பொதுவாக பாத்திரங்கள் இன்றியமையாதவாறு அமையவேண்டும் என்பதை,

“பாத்திரப் படைப்பு தான் நாடகத்தின் வெற்றி. நாடகக் கதை ஒரு முழு உருவம். கண், காது, மூக்கு முதலிய உறுப்புகள் பாத்திரங்கள். அதாவது ஒரு கதைக்குத் தலைவன், தலைவி மற்றும் கதை நிகழ்ச்சிகளில் தொடர்புடையவர்கள். இவர்களே பாத்திரங்கள் அல்லது உறுப்பினர்கள். உறுப்புகளில் ஊனம் இருந்தால் உருவம் அழகு பெறுமா? அதுபோல் உறுப்பினர்களின் படைப்பும் சரியில்லாவிட்டால் நாடகம் அழகு பெறாது” (அவ்வை தி.க. சண்முகம், நாடகச் சிந்தனைகள், 1978, வானதி பதிப்பகம், சென்னை – 17, பக்கம்.3)

என்ற மேற்கண்ட அடிகள் நாடகத்திற்கு பாத்திரப்படைப்பு எந்த அளவிற்கு முக்கியத்துவம் என்பதை அறியமுடிகிறது. அதாவது உடலுக்கு உடல் உறுப்பு எவ்வளவு முக்கியமோ அதுபோல தமிழுக்கு நாடகம் மிக முக்கியம் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

“தமிழ் இலக்கியத்தில் நாடகத்தின் கோட்பாடு” என்னும் இக்கட்டுரையில் நாடகம் என்பது ஆயிரம் சொற்களை நொடி நேரத்தில் அள்ளிவிசுமாறு நடித்துக்காட்டும் அறிய கலையான நாடகம்

என்பதைப் பற்றி விளக்கும் நாடக இலக்கணம் கூறும் நூல்கள் பற்றியும், நாடக வடிவமும் இலக்கணமும் எத்தகையவாறு அமையவேண்டும் என்றும் அறியமுடிந்தது. மேலும் நாடகமானது அதன் நாடக அமைப்பின் வடிவ விளக்கமும் நாடகத்தில் பயன்படும் இசைக்கருவிகளின் பயன்பாடுகளும் இக்கட்டுரையில் அறியமுடிந்தது. மேலும் தமிழில் இன்றுவரையுள்ள நாடக வகைகளும் நாடக இலக்கியத்தின் பாடுபொருள் எவ்வாறு அமைந்துள்ளன என்றும் அவற்றில் பின்பற்றப்படுகின்ற நாடக அறத்தினையும் நடிக்கும் கலைஞர்களின் நாடக நடிப்பும் நாடகத்தினால் அறியப்படுகின்ற பயன்பாடுகள் எவ்வாறு அமைகிறது என்றும் இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. சண்முகம், அவ்வை தி.க — நாடகக் கலை, பாரி நிலையம்
சென்னை – 108. தமிழ்நாடு, இந்தியா.பதிப்பு – 2009

2. சாமிநாதன், உ.வே. (உ.ஆ) — சிலம்பதிகாரம மூலமும் அரும்பத உரையும்,
கமர்ஷியல் அச்சுக்கூடம்,
இரண்டாம் பதிப்பு, சென்னை. தமிழ்நாடு, இந்தியா.1920.

3. சோமசுந்தரனார், பொ.வே. — கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை, பகுதி-க,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியீடு,
சென்னை - 1 தமிழ்நாடு, இந்தியா.1970.

4. தமிழண்ணல், — தொல்காப்பியம், பொருளதிகாரம், தொகுதி -1,
மீனாட்சி புத்தக நிலையம் வெளியீடு,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.ஏப்ரல் 2010.

5. தமிழண்ணல், — தொல்காப்பியம், பொருளதிகாரம், தொகுதி -3,
மீனாட்சி புத்தக நிலையம் வெளியீடு,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.ஏப்ரல் 2010

6. பரிதிமாற் கலைஞர் — நாடகவியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.2004.

7. ஞானம், முனைவர் — தமிழ் நாடகக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்,
கௌரா புத்தக மையம்,
திருச்சி – 1. தமிழ்நாடு, இந்தியா.பதிப்பு – 2016.